Reprint from "Kalaimagal."

# : சிவாஜி மஹாராஜாவின் தென்னிந்தியப் படையெழுச்சி :

* க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம். ஏ. *

மராட்டிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த சிவாஜி மஹாராஜாவின் வீரச்செயல்களும் அரசியல் முறைகளும் நம்நாட்டுச் சரித்திரத்திற்கு அணிகளாய் விளங்குவதை யாவரும் அறிவர். அப்பேரரசர் தென்னிந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது நிகழ்ந்த செய்தி ஒன்று அவருடைய அரசாட்சியில் பொது ஜனங்களின் நன்மையை இடைவிடாது கவனித்து வந்ததற்குத் தகுந்த சான்றாகும்; அச்செய்தியை விளக்கக்கூறுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

சிவாஜியின் தென்னிந்தியப் படையெழுச்சிக்குக் காரணம் என்ன? அவருடைய தகப்பனார் ஷாஜிக்குப் பிஜாபூர் சுல்தானிடமிருந்து கிடைத்திருந்த ஒரு பெரிய ஜாகீர் மைசூர்ச் சீமையிலிருந்தது. ஷாஜிக்குப் பிறகு அதைச் சிவாஜியின் தம்பி வெங்கோஜி ஆண்டு வந்தான். அவன் ஒரு தகுந்த சமயம்பார்த்துத் தஞ்சாவூர்ச் சீமையையும் தன் வசமாக்கிக்கொண்டான்.

வடக்கே சிவாஜிக்கும் முகலாயருக்கும் தீராத வைரம் ஏற்பட்டு அடிக்கடி போர்கள் நிகழ்ந்துகொண்டேயிருந்தன. சிவாஜிக்கோ, தம் தகப்பனாருடைய ஜாகீர் தமக்குச் சேரவேண்டுமென்றும், தம் தம்பி புதிதாக ஜயித்திருந்த தஞ்சாவூர்ச் சீமையையும், பொதுவாகவே தென்னிந்தியா முழுமையையுமே தாம் ஸ்தாபித்துவரும் மராட்டிய சாம்ராஜ்யத்தின் பகுதிகளாகச் செய்ய வேண்டுமென்றும் ஆசைகள் அதிகமாக ஏற்பட்டிருந்தன. ஆகையால், முகலாயருக்கும் தமக்கும் உள்ள யுத்தங்களின் நடுவே கொஞ்சம் அவகாசம் கிடைத்தபோது, அதாவது கி.பி. 1677-8-ல், சிவாஜி தென்னாட்டில் தமக்குள்ள நோக்கங்களை நிறைவேற்ற முயன்றார். கொஞ்சகாலந்தான் சிவாஜியால் தென்னிந்தியாவில் தங்கமுடிந்தது; அதற்குள் தம்முடைய முக்கியக் கருத்துக்களை அநேகமாய் முடித்துக்கொண்டு, பின் நடக்கவேண்டிய காரியங்களைக் கவனிக்கத் தகுந்த பிரதிநிதிகளை நியமித்துவிட்டு மஹாராஷ்டிரத்துக்குத் திரும்பினார்.

இப்படையெழுச்சியின்போது தென்னிந்தியாவின் நிலை மிகவும் சீர்குலைந்திருந்தது. பொதுவாகவே பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பம்முதல் விஜயநகர ஆட்சியின் வலிமை குன்றி, பிஜாபூர் கோலகொண்டா என்ற முஸ்லீம் ராஜ்யங்களின் ஆதிக்யம் ஓங்க ஆரம்பித்தது. இக்கேரி, மைசூர், செஞ்சி, தஞ்சாவூர், மதுரை முதலிய ஊர்களைத் தலைநகர்களாகக் கொண்டு முன் விஜயநகரராயர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த சிற்றரசர்கள் சுயேச்சையாக ஆட்சிபுரிய ஆரம்பித்தார்கள். ஆயினும் இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையின்றிப் பகைகள் ஏற்பட்டுச் சச்சரவுகள் உண்டானதால் முற்கூறப்பட்ட முஸ்லீம் ராஜ்யங்களின் அரசர்கள் இந்தச் சண்டைகளில் தலையிட்டுத் தங்களுடைய வலிமையைப் பெருக்கிக்கொள்ளத் தகுந்த தருணங்கள் பல ஏற்பட்டன.

இது தவிர, ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்து முதலில் வியாபாரத்திற்கென்று நம்நாட்டுக்கு வந்த வர்த்தகக் கும்பினிகள் பல துறைமுகப் பட்டணங்களில் பெத்திரிகள் திட்டங்கள் முதலியன ஏற்படுத்திக்கொண்டும், அந்த அந்த நாட்டு அரசர்களுடன் உடன்படிக்கைகள் செய்துகொண்டும், தேவையானபோது போர்கள் புரிந்தும் தங்கள் வியாபாரத்தையும் முடிந்த இடங்களில் தங்கள் ஆதிக்கத்தையும் பெருக்கிக்கொண்டு வந்தனர். இக்காலத்தில் நடந்த போர்களாலும் படையெழுச்சிகளாலும் நாடுகள் கை மாறினால், இந்த வர்த்தகக் கும்பினிகளின் பிரதிநிதிகள் நூதனமாக வந்த அரசனிடத்தில் தங்களுக்குப் பழைய அரசரால் கொடுக்கப்பட்டிருந்த வியாபார சுதந்திரங்களெல்லாம் அப்படியே மீண்டும் கொடுக்கப்படவேண்டுமென்று விண்ணப்பம் செய்து அப்படியே பெறுவது வழக்கமாக வந்துகொண்டிருந்தது.

சிவாஜியின் படையெழுச்சியின் பயனாகக் கோலகொண்டா சுல்தான் வசமிருந்த நாடுகள் சில மராட்டியர்வசமாயின. ஆகையால் புதுச்சேரி, பறங்கிப்பேட்டை, கூடலூர் முதலிய இடங்களில் வியாபாரம் செய்துவந்த பிரெஞ்சுக்காரரும் உலாந்தரும் சிவாஜியிடம் தூதர்களை யனுப்பித் தங்களுக்குக் கோலகொண்டா அரசனால் கொடுக்கப்பட்டிருந்த பாத்தியதைகள் சிவாஜியாலும் கொடுக்கப்படவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார்கள். இவ்வேண்டுகோளுக்கிணங்கிச் சிவாஜி உலாந்தர்களுக்குத் தாமே நேரிலும் தம் அதிகாரிகள் மூலமாகவும் கொடுத்த கவுல்களின் பிரதிகள் சிலவருஷங்களுக்கு முன்பே, அதாவது 1934-இல் பிரசுரம் செய்யப்பட்டன. அந்தக் கவுல்களில் ஒன்று கி. பி. 1677 ஆகஸ்டு 24-ஆம் தேதியில் தயாரானபோதிலும், ஏதோ காரணத்தால் உலாந்தர்

கை வசம் உடனே சேராமல் தடைப்பட்டு நின்று, கடைசியாய்க் கி. பி. 1678 மார்ச்சு மாதம் அவர்களுக்குக் கிடைத்தது.

இதில் பொதுவாக உலாந்தர்களால் கோலகொண்டா அரசர்களின் கீழ்க் கையாளப்பட்டு வந்த வியாபார முறைகளும் சுதந்தரங்களும் அவர்களுக்கு மீண்டும் கொடுக்கப்பட்டன. ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மாத்திரம் சிவாஜி பழைய வழக்கத்தை ஒப்புக்கொள்ளவில்லை; அதுமட்டுமல்ல, அவ்வழக்கத்தை எல்லாமுறைகளாலும் தடுக்கத் தம் பிரதிநிதிகளுக்கு வேண்டிய அதிகாரத்தையும் கொடுத்தார். இதைக் குறித்து அவரது கவுலில் காணப்படும் ஷரத்துப் பின்வருமாறு: 'துலுக்க ராஜ்யத்தில் நீங்கள் இந்நாட்டுப் புருஷர்களையும் ஸ்த்ரீகளையும் அடிமைகளாக விலைக்கு வாங்கி யாதொரு தடையுமின்றி அயல் நாடுகளுக்கு அனுப்பிவிடும் உரிமையைப் பெற்றும் அம்மாதிரி நடத்தியும் வந்தீர்கள்; ஆனால் இனிமேல், நாம் இந்நாடுகளுக்கு அரசாயிருக்குமட்டும் நீங்கள் யாரையும், புருஷனாகிலும் ஸ்த்ரீயாகிலும் சரி, அடிமையாக வாங்கவோ வேறு நாடுகளுக்கு அனுப்பவோ கூடாது. நீங்கள் அப்படிச் செய்ய யத்தனித்தால் நம் அதிகாரிகள் அதைத் தடுப்பார்கள். அதைத் தடுத்து அடிமைகளை விடுவித்து அவர்கள் உங்களிடம் திரும்ப அகப்படாமலிருக்க என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்யக் கடவர்கள். நீங்கள் இதை நன்றாக உணர்ந்து இதன் பிரகாரம் தப்பாமல் நடந்து கொள்ளவேண்டியது."

இது சிவாஜியின் அரசாட்சி முறைமையின் மேன்மையையும், பொதுஜனங்களுக்கு ஏற்பட்டிருந்த கஷ்டநிஷ்டூரங்கள் அம்முறையினால் தீர்க்கப்பட்ட மாதிரியையும் நன்றாகக் குறிக்கவில்லையா?

---